# சத்திய வேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிரஸ்," யாழ்ப்பாணம். 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

89-ம் புத்தகம் | யாழ்ப்பாணம், 1964-ஆ மார்கழிமீ 5-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 48-ம் இலக்கம்


# சர்வதேச நற்கருணை மாநாடு ஆரம்பிக்கப்பட்டது

28 – 11 – 64




6 – 12 – 64

## அன்பின் அரசர் வாழ்க! அருளும் அறமும் வளர்க!!

**பம்பாய் 28 நவம்பர்**

பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதியாக விசுவாசப்பரப்புதற் கழகத்தின் தலைவரான கர்தினல் பீற்றர் கிரகோரி ஆகாஜியானியன் ஆண்டகையவர்கள் 38-வது சர்வதேச சற்பிரசாத மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

28-ந்திகதி சனிக்கிழமை பம்பாய் மகாநாட்டு மைதானத்துக்குக் கர்தினலவர்கள் வந்து சேர்ந்தபோது நூற்றுக்குமதிகமான அதிமேற்றிராணிமார்கள், மேற்றிராணிமார்கள் ஆயிரத்துக்குமதிகமான குருக்கள் கன்னியரும் பெருந்திரளான விசுவாசிகளும் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

கர்தினலாண்டகை 30 அடி உயரமான பிரதான பீடத்துக்குச் சென்றுகொண்டிருக்கையில் பாப்பு வாழ்த்துக்கீதம் இசைக்கப்பட்டது. கர்தினலாண்டகை பின்னர் சம்பிரதாய முறைப்படி மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

(விசேட தந்திச் செய்தி)

### சரித்திரப் புகழ்பெற்ற பொருள்கள்

மாநாட்டுக் கண்காட்சியில் திருமறை வரலாற்றுப் புகழ்ச்சின்னங்கள் பல இடம்பெறுகின்றன. சார்தானிய நாட்டு பேகம் ஜோஹுசும்ரு அரசியார் அன்பளிப்பாக வழங்கிய தங்கத்தாலான பூசைப் பாத்திரம் இவற்றுள் ஒன்று. இதில் மிகச்சிறந்தரத்தினங்களும் வைரக்கற்களும் பதிக்கப்பட்டுள்ளன. பிரான்சில் செய்யப்பெற்ற விலைமதிக்கவொண்ணாத இப்பாத்திரத்தைக் கண்ணாரக்காணலாம். மேலும், ஆண்டவர் பாடுபட்ட திருச்சிலுவைப் பகுதியும், அர்ச்சியசிட்டர்களான இராயப்பர், சின்னப்பர், தோமையார், சவேரியார் ஆகியோரின் அருளிக்கங்களும் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

# பாரதத்தில் பரி. பாப்பரசர்



மக்களின் மாணிக்கத்திற்கு மகோன்னத வரவேற்பு

புதன்மாலை. பகலவனின் வெப்பம் தணியும் வேளை. பம்பாய் ஆகாய விமான நிலையத்தில் இருபது லட்சம் மக்கள் திரளாக நிறைந்து விமானம் வரும் திசையை நோக்கிக் காத்து நின்றனர். சரியாக 5-30 மணிக்கு பாப்புதந்தையைத் தாங்கிய விமானம் வந்திறங்கியது. மக்களின் மத்தியில் பரபரப்பு. இந்திய பிரதமர் லால்பகதூர்சாஸ்திரி, உதவி ராஷ்டிரபதி உசேன் அவர்களுடன் பாப்பரசரை வரவேற்கச் சென்றனர். விமானத்தில் இருந்தும் சின்னப்ப தந்தை வெளிவந்தார். பிரதமர் அவரை நல்லாசிகூறி வரவேற்றார். வரவேற்பை ஏற்றுக்கொண்ட தந்தை அவர்களை வாழ்த்தியபின் காத்துநின்றஇருபது லட்சம் மக்களையும் ஆசீர்வதித்துத் தமது இரு கரங்களையும் குவித்து இந்திய முறையில் வணக்கம் தெரிவித்தார்.

உதவி ராஷ்டிரபதி உசேன் பாரதத்திற்குப் பாப்பரசரை வரவழைக்குமுகமாக ஆற்றிய நல்லுரையின்போது: மக்களின் மத்தியில் போரும், பசிப்பிணியும் மறைய வேண்டும்; சமாதானம் நிலவவேண்டும் என்னும் பெருநோக்குடன் அயராதுழைக்கும் பரிசுத்த தந்தையின் பாரதவரவு நல்வரவாகுக என வாழ்த்தி நின்றார்.

அதைத் தொடர்ந்து சின்னப்ப தந்தை உரையாற்றியபோது: பாரத

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

## 40,000-க்கு அதிகமானோர் திருவிருந்தருந்தினர்

நேற்றுத் தொடங்கிய சற்பிரசாத மாநாட்டின் இரண்டாவது தினமாக இன்று நடைபெற்ற போந்திபிக்கல் பாடற்பூசையின்போது நாற்பதினாயிரத்துக்குமதிகமானோர் திவ்விய விருந்தில் பங்குகொண்டனர். திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ்வைபவத்தில் 80 குருக்கள் விசுவாசிகளிடையே நற்கருணையைப் பகிர்ந்தளித்த காட்சி மனோகரமாயிருந்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

பிரதான பீடத்தில் பாப்பரசரால் மந்திரிக்கப்பட்ட விசேட மெழுகுவர்த்தி ஒன்று நிறுவப்பட்டிருந்தது. கர்தினல் அகாஜியானியன் ஆண்டகை அவர்கள் இம்மெழுகுவர்த்தியைக் கொண்டு வந்தார்.

சர்வதேச சற்பிரசாத மாநாட்டு மைதானமும், பம்பாய் நகரின் ஹொட்டல்கள், விடுதிகள், பாடசாலைகள், கல்லூரிகள் முதலியனவும் இந்தியாவிலும், உலகமெங்கணுமிருந்துவந்த பார்வையாளர்களால் நிறைந்தவண்ணமிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண. குருப்பிரசாதிகளுக்கும்
விசுவாசிகளுக்கும்

### ஓர் அறிவித்தல்

**மழைக்காக செபங்கள்**

இன்று தொடக்கம் எமது மேற்றிராசனத்திலுள்ள ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் மழைக்காக விசேஷ செபங்கள் ஒழுங்கு செய்யப்படும். என்னென்ன செபங்கள் செபிக்க வேண்டுமென்று ஒவ்வொரு பங்குக் குரவரும் ஏற்ற ஒழுங்கு செய்வர்.

''மழைக்காக வேண்டுதல்'' என்னும் செபம் கட்டாய செபமாக உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு, தேவையான காலம்வரை தொடர்ந்து செபிக்கப்படல் வேண்டும்.

+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

### NOTICE TO THE CLERGY AND THE FAITHFUL

**PRAYERS FOR RAIN**

From today onwards special prayers will be organized in every parish for rain. The form of prayer is left to the discretion of the Parish Priest.

The Oratio Imperata "Ad petendam pluviam" is to commence immediately and continue for the necessary period.

J. Emilianus Pillai, O.M.I.,
2-12-64. *Bishop of Jaffna.*

**ஞானோபதேச நடுநிலையம்,**
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

**ஞானோபதேச வகுப்புகளுக்கு உபயோகிக்கத்தக்கதான படங்கள்**
எம்மிடம் விற்பனைக்கிருக்கின்றன.
தேவையானோர் விண்ணப்பிக்கவும்.

**தோழன் கிறிஸ்மஸ் இதழ்**
வெளிவந்துவிட்டது!
வருட சந்தா ரூபா 4-00
தனிப்பிரதி சதம் 30
தபாற்செலவு பிரத்தியேகம்
நிர்வாகி.

### விசேஷ கவனத்துக்கு!

சென்ற வாரக் காவலனில் நாம் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, பல சந்தாதாரர்கள் தாம் செலுத்தவேண்டிய பணத்தை உடனடியாக அனுப்பியதற்காக அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்னும் சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து, பாக்கித் தொகையுடன் வருகிற வருட சந்தாவாகிய ரூபா ஒன்பதையும் சேர்த்து, இம்மாதம் 10-ம் தேதிக்குமுன் அனுப்பி வைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

நிர்வாக ஆசிரியர்.

## சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ந் திகதி

# நற்கருணையும் நாமும்

நான் ஞாயிறு கடன் திருநாட்களில் பூசைக்குச் செல்லத் தவறுவதில்லை. கடன் திருநாட்களில் சரீரப்பிரயாசையான வேலைகள் மேற்கொள்வதில்லை. பிறருடன் எவ்வித தொந்தரவுகட்கும் செல்வதில்லை.

அயலவர்களுடன் அன்பாகவே நடந்துகொள்கிறேன். பத்துக் கற்பனைகட்கு விரோதமாக மனதறிய எதுவுமே செய்யவில்லை எனது மனச்சாட்சி எனது நடத்தை நல்லதெனக் கூறுகிறது. நல்ல சீவியத்திலேயே நடந்து வருகின்றேன்.

எனவே, எனக்கு அடிக்கடி தேவநற்கருணை பெறவேண்டிய அவசியமில்லை. பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டிய அவசியமுமில்லை: இப்படிக் கூறிக்கொள்பவர்கள் பலரை இன்று நாம் காணலாம்.

இது ஒரு மகத்தான தவறு ஆகும். வருடத்தில் ஒரு தடவை அதாவதுபாஸ்கு கடமையை அனுசரிக்க பாவசங்கீர்த்தனம் செய்தல், நன்மை பெறுதல் என்பவையுடன் எமது அறநெறிவழி முடிந்துவிடுவதில்லை.

மேற்கூறியபடி சொல்லிக்கொண்டு அல்லது எண்ணிக்கொண்டு பாவசங்கீர்த்தனத்தை அசட்டை செய்வது எமதான்மாவுக்குப் பெரிதும் கேடுவிளைக்கும். நாம் நல்லவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிவதால் ஏற்படக்கூடிய தொல்லைகள் பல.

கத்தோலிக்கன் என்பவன் கிறிஸ்துவின் வழியில் ஒழுகவேண்டியவன். கிறிஸ்துவின் வார்த்தைகட்கு செவிசாய்க்கவேண்டியவன். கிறிஸ்துவை மிஞ்சிய போதகர்கள் வேறு எவருமே கிடையாது. தேவையற்ற ஒரு கட்டளையை அல்லது போதகத்தை கிறிஸ்து எமக்குத் தந்திருக்கவும் மாட்டார்.

தேவகுமாரனின் மாமிசத்தைப் புசித்து இரத்தத்தையும் பானம் பண்ணினாலன்றி உங்கட்கு நித்தியசீவியம் இல்லை என அவர் திருவாய்மலர்ந்திருக்கிறார். அக்கருத்துடனேயே தமது சரீரத்தையும் இரத்தத்தையும் நற்கருணைமூலம் எமக்குத் தந்திருக்கின்றார்.

அவரை எவ்வளவு அதிகமாகப் பெறுகின்றார்களோ அவ்வளவு அதிகமாக அவர் அவர்களைத் தேவபுத்திரர்களாக்குவார் என சுவிசேஷக அருளப்பர் வலியுறுத்துகிறார். இதன்மூலம் அடிக்கடி தேவநன்மை பெறவேண்டியதன் அவசியம் தெரியவருகின்றது.

எனவே, நாங்கள் நல்லவர்கள் எனக்கூறிக்கொண்டே தேவநற்கருணை என்னும் தேவதிரவிய அனுமானத்தை அசட்டை செய்து வருபவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கின்றார்கள். தேவநன்மைக்கு உறுதுணையான பாவசங்கீர்த்தனத்துக்கும் இடமளிக்காதவர்கள் ஆகின்றார்கள்.

நற்கருணையும் பாவசங்கீர்த்தனமும் அறநெறி மார்க்கத்தின் இருபெரிய அம்சங்கள். அடிக்கடி கத்தோலிக்கர்களால் பெறப்படவேண்டிய தேவதிரவிய அனுமானங்கள்.

இந்த அனுமானங்களைச் சுற்றியதாக எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும் நீரும் உணவும் காற்றுமின்றி உடலம் உயிர்பெறாது. நன்மையும் சங்கீர்த்தனமுமின்றி எமதான்மாவும் உயிர்வாழாது.

இவ்விரு தேவதிரவிய அனுமானங்களும் எமக்குத் தேவனின் அருளைக் கொண்டுவரக்கூடியவை. அந்த அருள் மென்மேலும் எம்மை அறநெறி மார்க்கத்தில் நடாத்திச் செல்ல வல்லது. நாம் இவ்வனுமானங்களை அசட்டை செய்யும்போது இவ்வருள் எம்மை விட்டுச் சிறிதுசிறிதாக அகன்றுவிடுகின்றது.

நன்மையும் சங்கீர்த்தனமும் நமதிருகண்கள். அடிக்கடி அவற்றைப் பெறுவோம். அதன்மூலம் தேவ அருள் எம்மேல் பிரவாகிக்கச் செய்வோம்.

திருநாட்சிந்தனை :

## தேவமாதாவின் அமலோற்பவத் திருநாள்

(மார்கழி—8)

**"நான் ஆண்டவரில் ஆனந்தங்கொண்டு மகிழுவேன். என் ஆத்துமம் என் கடவுளில் களிகூரும். ஏனெனில், அவர் எனக்கு இரட்சணியத்தின் ஆடைகளை அணிவித்தார். நீதியின் உடுப்பை எனக்கு உடுத்தி, என்னை, தன் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மணவாளியைப்போல் ஆக்கினார்." [பிரவேசவாக்கியம்]**

இவை நமது பரிசுத்த அன்னையின் வார்த்தைகள், தனது மாசில்லா உற்பவத்தில் இறைவன் தனக்களித்த அற்புத சலுகையை அவள் இங்கு வருணிக்கிறாள். இசையாஸ் தீர்க்கதரிசியின் இந்த வாக்கியங்களைத் தனதாக்கிக்கொள்ள முழு உரிமையும் உடையவள் அவள் ஒருவள்தான். தேவன் மாசில்லாக்கன்னிகையின் திருஉற்பவத்திலே தம்முடைய திருச்சுதனுக்குத் தகுதியான வாசஸ்தலம் ஒன்றை ஆயத்தப்படுத்தினார்; (சபைச் செபம்) அவள் உருவாகியபொழுதே தேவஅருளினால் நிரப்பப்பெற்றிருந்தாள். அமல உற்பவத்தின் அர்த்தம் அதுதான். அதனால்தான் வானதூதனும், "அருள் நிறைந்தவளே, வாழ்க! கர்த்தர் உம்முடனே பெண்களுள் பேறுபெற்றவள் நீரே!" என அவளை வாழ்த்தினார்.

இன்று திருச்சபை அன்னைமரியின் அமலஉற்பவவிழாவைக் கொண்டாடி அவள் புகழைப்பாடுகிறது. "கன்னி மரியாயே, நீர் பூவுலகிலுள்ள சகல ஸ்திரீகளுள்ளும் உன்னத சருவேசுரனாகிய கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர். நீர் யெருசலேமின் மகிமை; நீர் இஸ்ரவேலின் ஆனந்தம்; நீர் எமது சனத்தின் பெருமை. மரியாயே நீர் பூரண சௌந்தரியவதி. சென்மமாசு உம்மிடம் காணப்படாது" [ஆரோகண கீதம்].

நசரேத்தின் தாழ்மையான கன்னிகை இப்புகழ்மாலைகளை எல்லாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகிறாள்? "ஆண்டவரே, தேவரீர் என்னைக் கைதூக்கினபடியால் நான் உம்மைப் புகழுவேன். என் சத்துருக்கள் என்னைப்பற்றிச் சந்தோஷங்கொள்ள விட்டீருமல்ல" [பிரவேசவாக்கியம்]. "என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப் படுத்துகின்றது; என் இரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தில் என்மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது; ஏனெனில், தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் கிருபகடாட்சத்தோடு பார்த்தருளினார்......ஏனெனில், வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது" [லூக். 1: 46—49].

கன்னிமரி எப்பொழுதும் எல்லாவற்றையும் கடவுளுக்கே அர்ப்பணித்தாள். அவரே அவள் உயிர். அவள் அவருக்காகவே உயிர்வாழ்ந்தாள். கர்த்தர் தமது கிரியைகளின் ஆரம்பத்திலே, ஆதிதொட்டு எதையும் உண்டாக்குமுன்னே அவளை உடையவராயிருந்தார் (நிருபர்).

தேவனின் திட்டங்களில் ஒருகருவியாக மாத்திரமே தன்னை அவள் எப்பொழுதும் கருதிவந்தாள். "இதோ, நான் ஆண்டவருடைய அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" [லூக். 1: 38]. தன்னை முற்றாகக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதே அவளுடைய வாழ்வாயிருந்தது. தன்னை முழுதும் கடவுளுக்குக் கையளித்தல்: அவர் வழிநடத்துவது போல் செயலாற்றுவது, உழைப்பது, சிவிப்பது—அதுவே செபம். தேவசித்தம் அவளைப் பெருந்துன்பத்துக்குட்படுத்தியது. வியாகுலவாளால் ஊடுருவப்பட்ட இதயத்தோடு சிலுவையின் அடியில் அவள் நின்றாள். ஆனால், அவள் மகன் சாவினின்று உயிர்த்தெழுந்த மகாஅற்புதத்தைக் கண்டு களிக்கும் பாக்கியத்தையும், ஈற்றில், அவளும் மகிமைப்பிரதாபத்தோடு பரலோகத்துக்கு ஆரோபணமாகும் பெரும்பேற்றையும் கடவுள் அவளுக்களித்தார். "உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது," என அவள் வேண்டினாள்; அதேபோல அவளும்பெற்றுக் கொண்டாள்.

இன்று நாம் நமது அமலஅன்னையின் அற்புதவிழாவைக் கொண்டாடுகிறோம். நாம் நமது அன்புத்தாயின் உத்தம பிள்ளைகளாக விளங்குகிறோமா? நாம் நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டிய முக்கிய கேள்வி இது. சிறப்பாக, நாமும் தேவதாயைப் போல் தேவசித்தத்துக்கு முற்றாகப் பணிந்த மனப்பான்மையுடையவராக விளங்க முயற்சிப்போமாக. அமல அன்னையே! நாம் இம்முயற்சியில் சித்தியடையத் துணைசெய்யும்.


—இ. மரியவளன்.

### கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞானஒடுக்கம் இளவாலை, திருக்குடும்ப கன்னியர் மடத்தில் மார்கழி மாதம் 9-ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவடையும்.

செல்வி தோமஸ் மனோன்மணி,
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!**

சென்ற ஞாயிற்றுக்கிழமை குருவானவர் பூசையில் அணிந்த உடுப்பு என்ன நிறம்? ஊதா. கடந்த இருபத்துநான்கு வாரங்களாகப் பச்சை ஆயத்தம் அணிந்தார். இன்னும் மூன்று ஞாயிற்றுக்கிழமை ஊதா அணிந்து பூசை ஒப்புக்கொடுப்பார்.

இந்தக் காலத்தை ஆகமனகாலம்— அதாவது கிறிஸ்துவின் வருகையை உலகமும், சிறப்பாய் யூதசனமும் எதிர்நோக்கியிருந்த காலத்தை நினைவூட்டும் காலமெனத் திருச்சபை அனுசரிக்கிறது. பாலன் பிறப்புக்கு ஆயத்தப் படுத்துங்காலமது.

கிறிஸ்து தம்மையே எமக்கு அளித்ததை நினைவுறுத்தும் விழா நத்தால் விழா. நாம் எம்மை அவருக்கு அளிக்கவேண்டும். அவர் தேவன். எம்மை அவருக்குக் கையளிக்கும்பொழுது அவருக்குப் பொருந்தாத எதுவும் எம்மிடம் இருக்கக்கூடாது: ஆகவே, எம்முடைய சுயநலம், மனிதப்போக்கு முதலியவைகளை நாம் கைவிட்டு யேசுவைப் போலிருக்க முயலுவோம்.

அத்துடன் யேசுவையும் சகல மக்களையும் தன்னகத்தே வைத்திருக்க ஆசிக்கும் யேசுவின் அன்பையும் பிறர் அறியச் செய்ய வேண்டும். அதற்குப் பரித்தியாகம் அவசியம்.

கொடுக்கும் அளவுக்கு நிரப்பப்படுவோம் என்பதை நினைவிருத்தி, பரித்தியாகச் செயல்களால் யேசுவின் பிறப்புத் திருநாளுக்கு ஆயத்தஞ் செய்வோம்,

—அண்ணா.

# ரோசாவும் முள்ளும்

—ஜெயம்—

உதயநேரம். சூரியன் உலகைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அந்த ரோசா மலர்ந்தது. நறுமணம் காற்றில் எங்கும் பரந்தது. போவார், வருவார் எல்லாம் அதன் அருகில் நின்று சுகந்தத்தை அனுபவிப்பர். அதன் அழகையும், மென்மையையும் மெச்சிப் புகழ்வர். வண்டுகள் சுற்றிச் சுற்றி இன்னிசை பாடும். வண்ணாத்திப் பூச்சிகள் சாமரம் வீசும். ரோசா இவற்றை யெல்லாம் பார்த்துப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் கொண்டு கூத்தாடியது. பூக்களுக்கெல்லாம் தானே அரசியென்ற கர்வமும் அதற்குத் தலைக்கேறி விட்டது. "புஷ்பங்களின் இராசாத்தி—பூங்காவின் பொன்மகளே" என்று யாரோ பாடிய ஒரு பாடலின் அடியை மெல்லத் தன் வாய்க்குள்ளே பாடிக் கொண்டு ஆடத் தொடங்கியது.

தோட்டக்காரச் சுப்பன் வழக்கம் போல நீர்வார்க்க அங்கு வந்தான். ரோசாவின் புன்னகையும், பாடலும், ஒய்யாரமும் அவனுக்கும் பெரும் அதிசயத்தை உண்டுபண்ணின.

"சுப்பா! எப்படி என் அழகு?" என்று ரோசா பெருமை ததும்பக் கேட்டது. சுப்பன் பல்லெல்லாம் காட்டிச் சிரித்தான். "எப்போதும் முட்களின் நடுவே இருக்க எனக்குப் பிடிக்கவில்லை சுப்பா; எந்தப் பக்கம் சரிந்தாலும் முட்கள்; முட்கள் முட்களாகவே இருக்கின்றன; இந்த உபத்திரவம் எத்தனைகாலம் சகிக்கலாம்? என் அழகு, மானம், மதிப்பு எல்லாம் இந்த முட்களால் மண்ணாகப் போகின்றன; இவற்றைச் சீவி எறிந்துவிட்டால் சிங்காரமா யிருக்கும்" என்று கோபத்தோடு சீறியது ரோசா.

ஒவ்வொரு முள்ளாகச் சீவத்தொடங்கினான் சுப்பன். "முற்றாகச் சீவு சுப்பா முற்றாகச்சீவு; ஒரு முள்ளும் தப்பாது சீவிவிடு" என்று ரோசா உத்தரவிட்டுக்கொண்டே யிருந்தது.

உத்தரவை மீறமுடியாமல் சுப்பன் சீவிக்கொண்டே யிருந்தான். "போதும், போதும் நிறுத்தடா" என்று புலம்பியது ரோசா. பாதி மொட்டையாகி, மேற்றோல் இழந்தசெடி சோர்ந்து, காய்ந்து, கருக ஆரம்பித்தது. பகலவன் சிரித்தான். பரிகசித்தான். அவனது பரிகாசத்தைத் தாங்கிக் கொள்ள ரோசாவால் தாளவில்லை. நாணத்தாலும், அவமானத்தாலும் குன்றித் தலை குனிந்தது.

சுப்பனுக்குக் கண்களில் நீரூறியது. கருகிய அந்தச் செடியைப் பிடுங்கி வீதியில் எறிந்தான்.

(உருவகக்கதை)

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இரக்கத்தினாலும், சதாசகாயமாதா, லூர்துமாதா, திரு இருதயமாதா என்று பற்பல நாமங்களால் அழைக்கப்படுகின்ற தேவதாயின் தயவாலும், சகல அவசரங்களில் உதவியாயிருக்கிற மகிமைநிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரின் பரிந்து பேசுதலாலும் அர்ச். யூதாததேயு, தோமையார், அகுஸ்தீனார். மார்த்தம்மாள், திரேசம்மாள், மதலேனம்மாள் மற்றும் சகல அர்ச்சியசிஷ்டர்களின் வேண்டுதலாலும் அடியேன் அநேகஆன்மசரீரநன்மைகளைப் பெற்றேன். இவை யாவற்றிற்கும் என மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன். பிரசுரகாலத்தாமதத்திற்காக தாழ்மையுடன் மன்னிப்புக் கோருகின்றேன். இன்னும் எங்களுக்கு வேண்டிய இகபர நன்மைகளைப் பெற்றுத்தரும்படி பாவியாகிய யான் மிக வினயமாய் வேண்டுகின்றேன்.

"யேசுவின் இராச்சியம் வருக"

செல்வி மே. மா. க.

மாதகல். ஆரோக்கியசாமி

### அறிவு நூல்கள்

"அறிவு நூல்களைக் கல், அறியாமைவிலகும்; அறியாமைவிலக அறிவுபெருகும்; அறிவுபெருக நன்னெறியில் நிற்பாய்; நன்னெறியில் நிற்பவனை நல்லார் புகழ்வர்."

## மார்கழி மாதம்

மார்கழி மாதமும் வந்ததே—அன்னை
மாமரி பாலகன் பாதமே
பூமண மாலைகள் சூடவே—நல்ல
புண்ணியப் பொன்மலர் தேடுவோம்

•

நாளும் பலிபூசை காண்பதால்—நாமும்
நன்மணித் தொட்டிலும் செய்குவோம்
சூழும் குளிர்பிடி யாமலே—அன்பில்
சொர்ணப் பீதாம்பரம் நெய்குவோம்

•

நெஞ்சினில் மெய்யருள் கூட்டியே—இன்ப
நேசத்தின் வாஞ்சையைக் காட்டியே
பஞ்சணை மெத்தைஉண் டாக்குவோம்—யேசு
பாலகனைத்துயி லாக்குவோம்

•

இன்னிசைப் பட்சிகள் போலவே—நாமும்
இன்சுவைக் கீதங்கள் தேக்குவோம்
மன்னர்கள் மன்னவன் வாழவே—செப
மாணிக்க மாளிகை ஆக்குவோம்

—எம்வி.

# பாப்புதந்தையின் பாரத விஜயம்

## விரிவான நிகழ்ச்சி நிரல்

### மார்கழி 2-ந்தேதி புதன்கிழமை

காலை: 5-00 மணி பியுமிசியானோ விமானநிலையத்துக்கு ஹெலிக்கோப்டர் விமானத்தில் வந்துசேர்தல்.
8-00 மணி ஏயர் இந்திய விமான நிறுவனத்தைச் சேர்ந்த போயிங் 707 விமானத்தில் புறப்படுதல்.
மாலை: 5-00 பம்பாய்நகர சாந்தாகுருஸ் விமானநிலையத்துக்கு வந்து சேர்தல்— பாரத ஆட்சியாளர்களும், கத்தோலிக்க அதிகாரிகளும் அளிக்கும் வரவேற்பு— அதிமேற்றிராசன மாளிகையைநோக்கி ராஜாங்க ஊர்வலம்— இடையில் ஊர்வலம் சற்பிரசாத மாநாட்டுப் பந்தரில் தரிக்கும். பாப்புதந்தை புதியகுருமாரை ஆசீர்வதித்தபின் ஊர்வலம் தொடரும்.
7-45 மணி ஊர்வலம் அதிமேற்றிராசன மாளிகையை அடைதல். சந்நியாசர்கள், கன்னியாஸ்திரிகட்குப் பேட்டியளித்தல்.
9-30 மணி பாரதத் தலைவர்களைச் சந்தித்தல்.

### மார்கழி 3-ந்தேதி வியாழக்கிழமை

காலை: 9-00 மணி பம்பாய் நகரமன்றத்தினர் அளிக்கும் வரவேற்புபசாரம்.
10-00 மணி பாரதத்திலுள்ள கத்தோலிக்க மதம்தவிர்ந்த ஏனையமதத்தினரின் தலைவர்கள் அளிக்கும் வரவேற்புபசாரம்.
11-00 மணி நற்கருணை மாநாட்டுக் காரியாலயத்துக்குத் தரிசனை— மேற்றிராசன கத்தோலிக்க கல்லூரிமாணவர்களைச் சந்தித்தல்.
12-30 மணி வெளிநாட்டு ராஜாங்க தூதுவர்களின் உபசரணை.
மாலை: 5-00 மணி மாநாட்டு மைதானத்தில் புதிய மேற்றிராணிமார்களை அபிஷேகித்தல்— 8-30 மணி பாரத அரசாங்கத்தால் ஒழுங்குசெய்யப்படும் கண்காட்சிக்குச் சமுகமளித்தல்— அர்ச். சவேரியார் கல்லூரியில் நற்கருணை மாநாட்டுக் கண்காட்சியைப் பார்வையிடல்— 9-00 மணி மாநாட்டுக் கலை, களியாட்ட நிகழ்ச்சிகட்கு விஜயம்.

### மார்கழி 4-ந்தேதி வெள்ளிக்கிழமை

காலை: 8-00 மணி அர்ச். சின்னப்பர் தேவாலயத்தில் பலிபூசை நிறைவேற்றுதல்— அனாதைகள் இல்லத்துக்குத் தரிசனையளித்தல்— 10·00 மணி உயர்தர பாடசாலைகளின் மாணவர்கட்குப் பேட்டியருளுதல்— 11-00மணி அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று நோயாளர்களைப் பார்வையிடுதல் 12-15 மணி இளங்குற்றவாளிகளின் சீர்திருத்த நிலையத்துக்கு விஜயம்.
மாலை: 5-00 மணி மாநாட்டு மைதானத்தில் சீரிய மலையாளமுறையில் நடாத்தப்படும் பலிபூசைக்குத் தலைமைதாங்குதல்— 9-00 மணி சிலுவைப்பாதை.

### மார்கழி 5-ந்தேதி சனிக்கிழமை

காலை: 8-00 மணி குத்துவபயிற்சி மாணவர்கட்காக மேற்றிராசனக்கோவிலில் பலிபூசை — 9-00 மணி குருமார், மேற்றிராணிமார்களுடன் மாநாடு. 10-15 மணி மரியன்னையின் திருசேத்திரத்துக்கு விஜயம். அதன்மேல் விமானநிலையத்துக்குப் பவனி — 12-00 மணி பாரத தலைவர்கள் அளிக்கும் பிரியாவிடையும், இத்தாலிக்குப் பிரயாணமாதலும்.
மாலை: 5-00 மணி உரோமை நகரைச் சேர்தல்.

குறிப்பு: இத்தாலியில் புறப்படும், சேரும்நேரங்கள் இத்தாலிய நேரத்தையே குறிப்பதாகும். இத்தாலிய நேரத்துக்கும், இந்திய நேரத்துக்குமிடையில் 4மணி 30நிமிடங்கள் வித்தியாசமுண்டு.

தகவல்: மடோனா

### நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதயம், சதாசகாய மாதா, அர்ச். அந்தோனியார், யூதாததேயு, அன்னம்மாள், சின்னத்தேரேசம்மாள் இவர்கள் சலுகையால் என்மன்றாட்டுக்கள் கிடைத்தன. இன்னமும் அவை பூரணமாகும்படி அவர்களை வேண்டுகிறேன். பிரசுரதாமதத்திற்காக மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரி. சதாசகாயமாதாவின் மன்றாட்டலும், அர்ச். சூசையப்பர், அர்ச். செபஸ்தியார், சகலஅர்ச்சியசிட்டர்கள், உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்கள் இவர்களுடைய வேண்டுதலாலும் நான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

எம். பி. என்.

மஸ்கேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

### இவ்வாரப் பிரமுகர்

இவ்வாரத்தில் கத்தோலிக்க உலகில் மிகமிக முக்கியத்துவம் பெற்று விளங்குபவர் பம்பாய் அதிமேற்றிராணியாரான கர்தினல் வலேரியான் கிராசியாஸ் ஆண்டகை அவர்கள். 38-வது சர்வதேச மாநாட்டை வெகு சிறப்பாகத் திட்டமிட்டு நடாத்துவதிலும், பாப்பரசரை இந்தியாவுக்குக் கொண்டுவந்ததிலும் தனிப்பெயர் பெற்றுவிட்டார் அவர். அவரைப்பற்றிச் சில விஷயங்களை எழுதுவதற்காக எண்ணியிருந்தபோது காத்திராப்பிரகாரமாக அவருடன் நன்குபழகிய பெரியாரொருவரைத் தரிசிக்க நேர்ந்தது. இப்பெரியார் ஒரு பெரிய அரசாங்க உத்தியோகத்தர். பல வருடங்களுக்கு முன்னர் தமது உத்தியோகம் சம்பந்தமாக பயிற்சிக்காகப் பம்பாய் சென்று பலமாதங்கள் தங்கியிருந்தவர்.

### கிராசியாஸ் சுவாமியுடன்

பம்பாய்க்கு இப்பெரியார் சென்றபோது அவருக்கு இந்தியாபற்றி எதுவுமே தெரியாது. ஆயினும் கொழும்பிலிருந்த குருவரொருவர் கிராசியஸ் சுவாமிக்கு ஒரு கடிதம் கொடுத்துவிட்டார். கடிதத்துடன் பம்பாய் சென்ற இந்த உத்தியோகத்தருக்குக் கிராசியஸ்சுவாமியார் நல்ல வரவேற்பளித்தார். தேவையான உதவிகளெல்லாம் அளித்தார். நல்லதொரு நண்பனுக விளங்கினுர் என்பதையும் முன்பின் தெரியாத எவர் சென்றுலும் சுவாமியாரின் உதவியைப் பெற்றுக்கொள்வதில் தடையிருக்காது என்றும் குறிப்பிட்டார். கிராசியஸ் கர்தினலானபின்னர் இப்பெரியார் ஒருமுறை பம்பாய்க்குச் செல்ல நேர்ந்தது.

### பதவிப் பெருமையற்றவர்

முன்னர் தனது நண்பராயிருந்தவர் இப்போது பெரும் பதவி வகிப்பதால் அவரைக்கண்டு பேசவும் சந்தர்ப்பம் கிடையாதென இவர் எண்ணியிருந்தார். ஆயினும் மேற்றிராசன மாளிகை சென்று கர்தினலைக் காணவந்த பிரமுகர்களுடன் காத்திருந்தார். கர்தினல் வந்ததும் இவரைக் கட்டித்தழுவித் தனியறைக்குக் கூட்டிச் சென்று சேமலாபங்களையும் குடும்ப அங்கத்தவர்கள்பற்றியும் வெகு அக்கறையோடு விசாரித்தாராம். கர்தினலாண்டகை மிக்க சுறுசுறுப்பு வாய்ந்தவர். எந்த அலுவலையும் தொடக்குவதற்கு முன்னர் திட்டமிட்டு ஆழ்ந்து சிந்தித்தே தொடங்குவார். தோல்விகளைக் கண்டு அஞ்சுவதில்லை என்றெல்லாம் இப்பெரியார் வர்ணிக்கின்றுர்.

### இரு மேற்றிராணிமார்களுடன்

கடந்த புதன்கிழமை உலகின் இரு அந்தங்களிலுள்ள இரு மேற்றிராணிமார்களைச் சந்திக்க நேர்ந்தது. ஒருவர் பிலிப்பைனைச் சேர்ந்தவர். மற்றவர் கனடியர். வத்திக்கான் சங்கத்துக்குச் சமுகமளித்துவிட்டு இந்தியா, இலங்கை முதலிய நாடுகளையும் தரிசித்துச் செல்லுமுகமாக வந்த இவர்கள் இருவரும் கொழும்பிலும் இருநாட்கள் தரித்து சுற்றுப்புறப் பகுதிகளையும் பார்வையிட்டனர். இவர்களுடன் இரு குருமாரும் வந்திருந்தனர். கனடிய மேற்றிராணியாரின் நாமம் கென்றிருதியர் என்பது. பிலிப்பைன் மேற்றிராணியார் ஜொாட் மொங்கோ. இவரின் சகோதரரான மொங்கோ சுவாமியாரும் வந்திருந்தவர்களில் ஒருவர்.

### ஈழத்தின் இயற்கை வளத்தில்

ஓ. எம். ஐ. எனப்படும் அமலோற்பவ பரித்தியாகிகள் குழுவைச் சேர்ந்தவர்கள் இந்த மேற்றிராணிமாரும் குருக்களும். எனவே தங்கள் சபையைச் சேர்ந்த குருக்கள் யாராவது கடமையாற்றும் உள்நாட்டுப் பகுதிகளைச் சந்திக்கவும் அப்பகுதியில் வதியும் மக்களுடன் பழகவும் விரும்பினுர்கள். எனவே கொழும்பு மேற்றிராசனத்தைச் சேர்ந்த சிமித் குருவரவர்கள் இந்தக் குழுவினரைக் கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் பாதையில் கொண்டுசென்று காண்பித்தார். இலங்கையின் இயற்கைக் காட்சிகள் இரு மேற்றிராணிமாரையும் நன்கு கவர்ந்து விட்டன. மலைகளும், குன்றுகளும் இடையிடையே வீடுகளும், தோட்டங்களும், மலைகளைச் சுற்றிப் பாதைகளும் செல்லும் காட்சியையும் பச்சனவான தோற்றத்தையும், குளிர்ந்த சுவாத்தியத்தையும் அவர்கள் நன்கு இரசித்து மகிழ்ந்தனர். உலகின் பல இடங்கட்கு நாங்கள் சென்றிருக்கிறோம். ஆனுல், இதைப்போன்றதொரு காட்சியைக் கண்டதில்லை என மொங்கோ மேற்றிராணியார் குறிப்பிட்டார்.

### அவிசாவலையில்

பாதைகளில் சென்று பார்வையிட்டபின் அவிசாவலை விசாரணைப்பங்குக்கு இவர்கள் விஜயம் செய்தனர். ஆலய முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த பாடசாலைச் சிறுவர்களுடன் இவர்கள் வெகு ஆர்வத்துடன் சம்பாஷிக்க முனைந்தனர். ஆயினும் புதிய மேற்றிராணிமாரைக் கண்டும் அவர்கள் பிறநாட்டவர் என்ற காரணத்தாலும் ஆங்கிலமொழி தெரியாத காரணத்தாலும் அஞ்சிய சிறுமிகள் முதலில் எதுவுமே பேசவில்லை. ஆயினும் சிறுமிகள் சில சிங்களப் பாடல்களை இசைத்து மேற்றிராணிமாரை மகிழ்வித்தனர். அப்பகுதியின் கத்தோலிக்க மக்களது பொருளாதாரம் முதலியனபற்றி விசாரித்தபின் தங்கள் நாட்டிலும் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் வறியவர்கள் என பிலிப்பைன் மேற்றிராணியார் குறிப்பிட்டார்.

### சகோதரத்துவ மனப்பான்மை

தங்கள் சபைக்குருவர்களும் ஆயர்களும் இலங்கையில் செய்யும் சேவை பற்றி அவர்கள் பல வினுக்களைப் பொறித்தனர். எனக்குக் கிடைத்த சொற்ப நேரத்துள் அமலோற்பவ பரித்தியாகிகள் எனப்படும் ஒ எம். ஐ. சபையினர் இலங்கையில் ஆற்றிவரும் அளப்பரிய வேதபோதகத் தொண்டுகளை விபரித்தபோது அவர்கள் தங்கள் சகோதரர்களான குருக்கள் பற்றிப் பெருமிதமடைந்தனர். மசனட் ஆண்டகையால் தொடக்கப்பட்ட இச்சபையின் தொண்டர்கள் உலகமடங்கிலும் கர்த்தரின் திராட்சைத்தோட்டத்தில் பயனுள்ள சேவையில் ஈடுபட்டுள்ளார்களென அவர்கள் குறிப்பிட்டனர். பிலிப்பைன் மேற்றிராணியார் அன்று மாலை இந்திய நற்கருணை மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்பட்டார். கனடிய மேற்றிராணியார் வியட்நாமில் கத்தோலிக்கத்தின் நிலையை அறிவதற்காக வியட்நாமை நோக்கிச் செல்கிறுர். இந்த இரு மேற்றிராணிமார்களும் அளித்த பேட்டிக்காகவும். நல்லாலோசனைகட்காகவும் பேசும்பேனு சிரந்தாழ்த்தி நன்றி கூறிநிற்கின்றது.

---

### நன்றியுரை

நம்பி வரம் கேட்கும் எவருக்கும் நிச்சயம் அருள்புரிபவரான அர்ச். யூதா ததேயுவின் புதுமையினுல் ஆச்சரியகரமாக யான் பெற்ற பெறுபேறுகட்காக நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கின்றேன்.

நிறைந்த கவலைகஷ்டங்களுடே மனமொடிந்து தத்தளித்த எனது மன்றுட்டுப்படி "மகனின் நோய்நீங்கி, பரீட்சையிற் சித்தியடைந்து உத்தியோக உயர்வும் கிடைக்கப்பெற்றேன். இத்தூயரின் புகழ் பரவுவதாக!

யாழ்ப்பாணம்

---

## மரணச் செய்தி

பழுத்த பழமானுலும் இறுதிவரை ஞானத்தூய்மையின் நறுமணம் கமழ்ந்து கொண்டேயிருந்து உயிர் நீத்தார் புதுக்குடியிருப்பு, புனித சூசையப்பர்பங்கின் மூப்பரான மரியான் பிலிப்பு அவர்கள். சென்ற 8-11-64-ல் உயிர்நீத்தபொழுது அவரின் வயது 77.

பங்கின் கிறீஸ்தவர்கள் அனைவரும் புடைசூழ்ந்து, உற்றுர் உறவினருடன் ஒருங்குசேர்ந்து, இறுதிமரியாதையோடு இறைவனை இவருக்காகப் பிரார்த்தித்த மேரையாய் இருந்தனர். அவ்வேளை இவரது சடலம் 33 வருடகாலமாய்த் தம் கண்ணின் மணிபோலப் பராமரித்து வந்த ஆலயத்தின் மத்தியில் கிடத்தப்பட்டிருந்தது. துக்கப் பாடற்பூசை நிறைவேற்றப்பட்டு, இவரது வாழ்க்கையில் இலங்கிய நற்குணங்களையும், திருப்பணியிலும் பொதுச்சேவையிலும் இவர் காட்டிய அயராத ஆர்வத்லதயும், உழைப்பையும்பற்றி கட்டளைக்குருவானவரால் சிறுஉரை நிகழ்த்தப்பட்டது

ஈற்றில், வெகுவிமரிசையாக பக்திப் பாடல்களுடன் வாத்திய இசையும் சேர்ந்து பிரிவை இரங்கிநிற்க, பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது

இவரை அறிந்த நண்பரும் உறவினரும் இவரது ஆன்ம சாந்திக்காக வேண்டிக் கொள்வார்களாக.

ப. யோசை

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எமது பரலோக பூலோக அன்னையாகிய பரி. சதாசகாய மாதாவினதும், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யூதாததேயு அப்போஸ்தலரினதும் மன்றுட்டினுல் நான் இரந்துகேட்ட சலுகைகள் கிடைக்கப்பெற்றேன். அதற்கு நன்றியாக அவர்களின்நாமம் புகழப்பட இதைப் பிரசுரிக்கிறேன். இன்னும் எனது மன்றுட்டுகளுக்குச் செவிசாய்க்கும்படி கேட்டுநிற்கிறேன்.

பெரும்பாவி

---

அல்பிறட் தேவசகாயம் குரூஸ்

அமரபதமடைந்த

## முதல் வருட ஞாபகம்

| பிறப்பு : | இறப்பு: |
|---|---|
| 17-12-1909. | 8-12-63. |

"நீதிமான் விசுவாசத்தினுல் சீவிக்கிறுன்.

நீதிமான்களுடைய ஆத்துமங்கள்

சருவேசுரனுடைய கரங்களிலிருக்கின்றன."

எங்களால் எக்காலத்தும் மறக்கமுடியாத விதமாய் எம்மை நேசித்துவந்த அருமைச் சகோதரன் அல்பிறட் தேவசகாயம்குரூஸ் மரணமான முதல்வருடம் 1964-ம் வருடம் மார்கழிமாதம் 8-ந்திகதி பூர்த்தியாகிறபடியால் மறுதினம் 9-12-1964 புதன்கிழமை காலை பேசாலை. அர்ச். வெற்றிநாயகி ஆலயத்தில் துக்கப் பாடற்பூசை நடைபெறும்

இதைக்கண்ணுற்றோர் அனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கோருகின்றோம்.

இவரது பிரிவால் வருந்தும் :

சகோதரர், மக்கள், மருமக்கள்

---

### நேர்த்தியின் பூர்த்தி

திவ்விய இருதயநாதரின் கிருபையாலும், அளவில்லாத சகாயஅன்னை, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார் இவர்களின் மன்றுட்டினுலும் நான் கேட்டுக்கொண்ட வேண்டுதல் கிடைக்கப்பெற்றேன் அவர்களின் நாமம் புகழப்படுவதாக. காலதாமதத்திற்கு மன்னிப்புக்கோரி, நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

புங்குடுதீவு

---


## அல்ஸ்ட்ரன்

# மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.


CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்(கொழும்பு)லிமிட்டெட்,

தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் வத்திக்கான் சங்கத்தின் 3-வது அமர்வு முடிவு



வழமைபோல் வத்திக்கான் சங்க முடிவுக் கொண்டாட்டத்திற்குப் பாப்பரசர் தமது பரிவாரங்களுடன் பல்லக்கில் பவனியாகக் கொண்டுவரப்பட்டார். மூவாயிரக்கணக்கான மேற்றிராணிமார் மத்தியில் சில தீர்மானங்களை அறிவித்தார். ஈற்றில் பரிசுத்த தேவமாதாவை, "திருச்சபையின் மாதா" என்ற புதியதோர் நாமதேயத்துடன் சமர்ப்பித்தார்.

அத்தோடு மேற்றிராணிமாரின் வேண்டுகோளுக்கிணங்க நற்கருணை உபவாசத்தில் ஒரு மாற்றத்தையும் தெரிவித்தார். இதுவரை 3 மணித்தியால உபவாசம் நற்கருணை பெறுவதற்குத் தேவையென கட்டளையிருந்தது. அதனை மாற்றி 1 மணித்தியால உபவாசம் போதுமென அறிவித்தார். ஆனால் மதுபானத்தைக் குறித்து மாற்றமில்லையெனவும் அறிவித்தார். (அதாவது மதுபானத்தைப் பொறுத்தவளவில் 3மணித்தியால உபவாசம் தேவை.)

## 4-வது அமர்வு

2-ம் வத்திக்கான் சங்க 4-வது அமர்வு இருக்குமென்றும் ஆனால் அது எப்போது நடைபெறுமென்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் பரிசுத்த பாப்பரசர் கூறினார். மேலும், திருச்சபையைப்பற்றிய தீர்மானங்களை மேற்றிராணிமாரிடம் சமர்ப்பித்தார்.

திருச்சபையின் ஆட்சியில் எப்படி மேற்றிராணிமாரும் பாப்பரசரும் இருக்கவேண்டும் என்ற நிர்வாகத்தை இந்தச் சட்டப்பிரமாணத்தில் எடுத்துக் காட்டினார்.

தமது 40 நிமிட முடிவுரையில் திருச்சபையில் இல்லறத்தினர் மாட்சிமையைப்பற்றி விளக்கித் தற்கால உலகில் அவர்களின் கடமைகளைத் தெளிவுபடுத்தினார். உலகில் 90 கோடி பிரிந்த கிறிஸ்துசபைகளோடு ஒற்றுமையை அடையும் முகமாக என்னென்ன முறையில் நாம் "சம்பாஷணை" செய்துகொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## பாரதத்தில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு வந்ததும் தாம் அடைந்த சொல்லொணு மகிழ்ச்சியைத் தெரிவித்து, இப்புனித புகழ்பெற்ற இந்தியாவிற்கு வரவேண்டும் என்ற எனது பேராவல் இன்று நிறைவேறிவிட்டது. இச்சற்பிரசாத மாநாட்டில் கலந்துகொள்ளும்போது பாரதமக்கள்மீது பரமனின் ஆசியை வேண்டுவேன். எமது இறைவனே ஒரு தந்தை. அவரின் பிள்ளைகளாகிய நாம் சகோதரர்கள் என்ற உண்மையை உணர்ந்து நீதியும், நேர்மையும், சகோதர பாசமும் தழைத்தோங்க உழைப்போம். எனது இப்பாரதத் திருயாத்திரை அன்பையும், ஆனந்தத்தையும், சாந்தியையும், சமாதானத்தையும் கொண்டுவரும் யாத்திரையாகுக. இப்பாரதத்தின் ஒவ்வொரு மகனுக்கும் எனது இதயபூர்வமான ஆசிகள் உரியதாகுக எனக் கூறி, தமது சிற்றுரையை முடித்துக் கொண்டார்.

வெள்ளம்போல் தேங்கி வழிந்த மக்களின் கரகோசம் வானத்தைக் கிழித்தது. பின் தனது வலது பக்கமாக கருதினல் கிருசியஸ் வலேரியனுடனும், இடது பக்கமாக உதவி ராஷ்டிரபதி உசேனுடனும் பரிசுத்ததந்தை தனது திறந்த வெள்ளை "போர்ட் லிங்கன்" வாகனத்தில் 6 மைல் தூரத்தில் இருக்கும் மேற்றிராணியார் இல்லத்திற்குப் பிரயாணமாயினர். வீதியின் இருமருங்கும் தந்தையின் திருமுகதரிசனம் பெற கணக்கற்ற மக்கள் காத்து நின்றனர்கள். இவர்களை ஆசீர்வதித்தபடியே பாப்பு பவனிசென்றார்.

## பம்பாய் மாநாட்டுத் திடல்

**I. ஓவல் மைதானத்தில்**

**மாநாட்டு உறுப்பினர்களுக்காக:**

(அடையாளச்சீட்டு வைத்திருக்கவேண்டும்)

(அ) இருக்கை வசதி

(1) 10 ஆயிரம் நாற்காலிகள்: பத்திரிகையாளர், புகைப்படமெடுப்போர், குருமார், கன்னியர் முதலியோர்.

(2) 30ஆயிரம் கட்டண நாற்காலிகள்: வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் வரும் சிறப்பு விருந்தினர்கள்.

(3) 20 ஆயிரம் கட்டண நாற்காலிகள்: பம்பாய்நகரப் பிரமுகர்களுக்கு.

(4) 20 ஆயிரம் இலவச நாற்காலிகள்: யாரும் அமரலாம்.

(ஆ) மைதானத்தில் நிற்கவசதி:

60 ஆயிரம் பேர் தலைமறைக்காது நின்றுபார்க்கலாம்.

(இ) மைதானத்திற்கு வெளியேநிற்க வசதி: 60 ஆயிரம்பேர் அங்கிருந்தும் நிகழ்ச்சிகளைக் காணலாம். (இதெல்லாம் உறுப்பினர்களுக்கு).

**II. பொதுமக்கள்**

(அ. சீ. பெருதவர்கள்)

(அ) மைதானத்தில் நிற்கவசதி 10 ஆயிரம் பேர்.

(ஆ) வெளியில் நிற்கவசதி ஒரு இலட்சம் பேர்.

**III. அரங்கப் பகுதிகளில்**

(அ) உட்கார 10ஆயிரம் நாற்காலிகள்.

(ஆ) இதரபகுதிகளில் வாங்குகள்.

(இ) 5 ஆயிரம்பேர் திறந்த வெளிப்பகுதியில் நிற்கவசதி.

## பாதுகாப்புக்காக......

பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பர் பம்பாயில் உள்ள குடிசைவாழ் ஏழைமக்களைத் தரிசிக்க ஏற்பாடுகள் செய்திருந்தும், இந்திய அரசாங்க பாதுகாப்பு இலாகை, பரிசுத்த பாப்பரசரின் பாதுகாப்புக்காக இந்த ஏற்பாடுகளை ரத்துச் செய்துள்ளது.

## பம்பாய்... வத்திக்கான்

பரிசுத்த பாப்பரசர் பம்பாயில் தங்குமளவும் பம்பாய் அதிமேற்றிராணியார் இல்லத்திலிருந்து வத்திக்கானுக்கு விசேட நேர் தொலைபேசிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

# பாப்பு தந்தை பேசுகிறார்

பாப்பரசர் ஒரு மிஷனரியாக வேதபோதகராக மாறிக்கொண்டிருக்கிறார் என நீங்கள் கூறக்கூடும். ஆம், பாப்பரசர் ஒரு மிஷனரியாகவே மாறிவிட்டார். அதன் அர்த்தம் அவர் வேதபோதகத்துக்குச் சாட்சியளிப்பவராக, ஓர் ஆயனாக, ஓர் அப்போஸ்தலனாகச் சென்றுகொண்டிருக்கிறார் என்பதுதான்.

உலக வேதபோதக தினமாகிய இன்று இவ்விதம் கூறுவதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

நாம் மேற்கொள்ளும் பிரயாணம் எளிமை நிரம்பியது. ஆடம்பரமற்றது. மிகச் சுருக்கமானது. வரையறுக்கப்பட்டது. நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் கிறீஸ்துநாதருக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அவருக்கே இதன் சகல புகழ்ச்சியும் உரியது.

கடந்த காலத்திலும் இன்றும் கர்த்தரின் சுவிசேஷத்தைப் போதிப்பதில் புனித சவேரியாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் சென்றவர்கட்கு சாட்சியம் கூறவும் அவர்களின் தியாகம் நிரம்பிய சேவைகளைச் சிந்திக்கவும் அவ்வழியே நாமும் செல்லவும் எண்ணியிருக்கின்றோம்.

ஆசியாவிலும் சிறப்பாக இந்தியாவிலும் உண்மையொளியின் விதையை நாட்டியவர்கள் அப்புனிதர்கள். அப்புனிதர்களின் செயல்களை நினைவுகூர்வதுடன் பொதுச்சங்கத்தின் இன்றைய குரலொலியான வேதபோதகமும் கிறிஸ்துவின் இராச்சிய விஸ்தரிப்பும் இப்புனித பயணத்தினால் வலியுறுத்தப்படும்.

எமது திருச்சபையின் வீரம் நிரம்பிய பரித்தியாகிகளின் வேதபோதகத்துக்கும் உலகம் முழுவதிலும் கிறீஸ்துவின் சுவிசேஷத்தை அறியச் செய்வதில் அவர்கள் காட்டிவரும் ஆர்வத்துக்கும் சுறுசுறுப்புக்கும் கைம்மாறுகாட்டுமுகமாகவும் இப்பயணம் உதவும் என நம்புகின்றோம்.

இறுதியாக எமது இப்புனித யாத்திரை இப்பூவுலகில் வதியும் மக்கள் ஒருவரொருவரை நன்கறிந்து நேசிப்பதன்மூலம் சமாதானத்தையும் சகோதரத்துவ அன்பையும் அகில உலகிலும் பிரவாகித்தோடச் செய்வதாக அமைய வேண்டுமென்பதே எமது ஏக அவா.

\+ ஆறுவது சின்னப்பர்

### இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகள்

நாள்: 5-12-64 சனி
6-12-64 ஞாயிறு
7-12-64 திங்கள்

நேரம்: காலை 6-55 முதல் 7-00 வரை

உரை: வண பிதா G. T. பாலசுந்தரம், O. M. I.

### மார்கழி 8 கடன்திருநாள்

யாழ்ப்பாணப் பட்டினத்தில்
தனிச்சிறப்புடன் விளங்கும்
விருந்தினர் மாளிகை
"பாம் கோட்"



எவ்வித கொண்டாட்ட வைபவங்கட்கும்
உகந்த இடம்
"பாம் கோட்"
யாழ்ப்பாணத்தில்
விடுதி வசதிகளுக்குப்
பேர்பெற்ற தலம்
"பாம் கோட்"



சீர்மைக்குடிவகைகள் விற்க
உத்தரவு பெற்ற
"ஹொட்டல்"
"பாம் கோட்"
202, பிரதானவிதி, தொலைபேசி : 628
யாழ்ப்பாணம். தந்தி : "பாம் கோட்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன பார்வை!... உந்தன் பார்வை!!...

● சாந்தம் நிறை பார்வை! ● அன்புப் பார்வை!

● துயரப் பார்வை! ● இரக்கப் பார்வை! ● கண்டிப்புப் பார்வை!

● அதிகாரப் பார்வை ● நீதியின் பார்வை!




## உலக வாழ்விலே....

பார்வைகள் பலரகம்!........அவை சொல்லும் கதைகளோ ஆயிரம்?... மழலைபேசும் மதலை தன்னை மார்புடன் அணைக்கும் அன்னையை நோக்குகையில் சாந்தம் மிளிர்கின்றது அதன் பார்வையில். காதலர் ஒருவரொருவரை கனிவுடன் நோக்குகையில் அன்பு ஜொலிக்கின்றது அவர்கள் விழிநோக்கில். நாமாக வேதனைப்படுகையில் துயரம் தவழுகின்றது எம்பார்வையில். அடுத்தவர் துயர்கண்டு அல்லலுறுகையில் இரக்கம் சிந்துகின்றது எம் கண்நோக்கில். தன் மைந்தன் தவறியவிடத்து அவனைத் திருத்துகையில் கண்டிப்புந் தொனிக்கின்றது ஒரு தந்தையின் பார்வையில். தொழிலாள வர்க்கத்தினரை அதட்டி வேலை வாங்குகையில் அதிகாரம் தாண்டவமாடுகின்றது முதலாளியின் பார்வையில். நீதியாசனத்தில் அமர்ந்து வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கும் நீதியரசரை ஒரு கணம் ஏறிட்டுப் பாருங்கள்! நீதியைப் பிரதிபலிக்கும் அவரது பார்வை......இங்ஙனமாக வாழ்க்கையின் ஜீவநாடியே பார்வையில் ஊசலாடிக் கொண்டேயிருக்கின்றது.

## இரட்சகரின் வாழ்விலே....!

● பெத்லகேமின் மாட்டுக்கொட்டில். ஏழ்மையின் சின்னங்கள் நடுவே மகிமையின் அரசன். பால்மணம் மாருப் பச்சிளங் குழந்தை. வாரும் வணங்குவோமே! இதோ இடையரும், அரசர்கள் மூவரும். அடிபணிந்து வணங்குகின்றனர். ஆசி அளித்து நோக்குகின்றார் பாலகயேசு. —இது அவரதுசாந்தம் நிறைபார்வை!

● ஜெருசலேம் வீதிகளில் பிரசங்கிக்கின்றார் யேசுபெருமான். பலரை மயக்கி பாவத்தில் வீழ்த்திய பட்டணத்துப் பாவி மரியமதலேனாள் காண்கிறாள் அவரை ஜோதிவீசும் சுந்தர வாலிபனை அவரது தோற்றத்தில் லயித்து விடுகிறாள். வீடு திரும்பி அலங்காரமாக ஆடையணிந்து எதிரே வருகின்றாள். யேசு அன்பொழுக நோக்குகிறார் அவளை. ஊடுருவுகிறது. தேவசிநேகத்தின் காதல் அவளுள்ளத்தில். இதோ! மனஸ்தாபக் கண்ணீருடன் அவர் பாதத்தில் அவள் தெண்டனிட்டுக் கிடக்கின்றாள். இது யேசுவின் அன்புப் பார்வை!

● லாசாது கல்லறையின் முன் யேசு. அவரது பிரிய சிநேகிதனல்லவா! மனித சுபாவத்திலே அவரும் கண்ணீர்விட்டு அழத்தான் செய்கிறார். தமது தெய்வீக வல்லமையைக்கூட அவர் சற்றுப் பொறுத்துத் தான் கையாளப்போகிறார். இதற்கிடையில் சோகமாக நோக்குகின்றார் அந்தக் கல்லறையை—இது தூயயேசுவின் துயரப் பார்வை!

● ஜெருசலேம் நகரின்முன் வருகின்றார் யேசு. அந்நகரின் அழிவைத் தம் எதிர்கால நோக்கில் அறிகின்றார். "அந்தோ! கோழியானது தன் குஞ்சுகளை அரவணைத்தது போல உன்னையும் அரவணைக்க விரும்பினேன். நீயோ நான் வந்த காலத்தை உணராமல் போனாய்" என வாய்விட்டு அங்கலாய்த்து அந்நகரை நோக்குகின்றார் —இது இரட்சகரின் இரக்கப்பார்வை!

● பூங்காவனத்தில் கைது செய்யப்படுகின்றார் எம்பெருமான். கட்டிய கட்டுக்களோடே தரதரவென்று இழுத்துச் செல்கின்றனர் சிறைச்சாலை நோக்கி. இடையில் இருவரை நோக்குகின்றார் யேசு கண்டிக்கும் முகமாக. ஒருவர் இராயப்பர்...யேசுவின் பார்வையின் அர்த்தத்தை விளங்குகின்றார். மனஸ்தாபக்கண்ணீர் சிந்துகின்றார். நீதிமானாகின்றார். மற்றவன் யூதாஸ்... ...யேசுவின் பார்வை அவனைக் கண்டனப்படுத்துகின்றது. தூக்குக் கயிற்றில் நித்திய கேட்டைச் சம்பாதித்துக் கொள்கின்றான்—இது கர்த்தரின் கண்டிப்புப் பார்வை!

● பிலாத்துவின் அரியாசனத்தின் முன் நிற்கின்றார் வானங்களின் தலைவன். "நீ இராசாவோ?" என்கின்றான் பிலாத்து. அதிகாரம் நிறைந்த பார்வையைச் செலுத்துகின்றார் அவன் மேல். நீயே சொல்லுகின்றாயே!... பிதாவின் வலப்பாரிசத்தில் மனுமகன் வரும்போது அவர் மகிமையைக் காண்பாய்! என்று வல்லமையுடன் கூறுகின்றார்— இது யேசுபெருமானின் அதிகாரப் பார்வை!

● யேசுமீட்பர் பரலோகம் சென்றுவிட்டார்! பிதாவின் வலப்பாரிசத்தில் வீற்றிருக்கிறார். என்றோ ஒருநாள் நம்மை நடுத்தீர்க்க வருவார். அப்பொழுது அவரது நீதியின் பார்வையின் முன் நடுங்கத்தான் செய்வோம். நீதிமான்களுக்குக் கனிவாகத் தோன்றும் அப்பார்வை பாவிகட்குப் பயங்கரமூட்டுமல்லவா!— இது அவரது நீதியின் பார்வை!

## பாவிகள் வாழ்விலே!....

ஆம்! எமது பாடசாலைகளிலும் வீடுகளிலும் இவ்வார்த்தைகள் அவரது கண்ணுக்கும் தென்படக் கூடியதாக பொறிக்கப்பட்டிருப்பது மிகவும் விரும்பத்தக்கதே. சிறுவர்கள் தேவசமுகத்தில் வளரவும் குடும்ப அங்கத்தவரிடையே களவு, காமாதுரம், கெட்ட பேச்சுக்கள்போன்ற பாவங்களை விலக்கவும் இதுஒரு சிறந்தவழியாகும்.

உண்மைச் சம்பவங்கள் இரண்டு இதோ!... என்ன கதையென்றதும் கண்களை அகல விரிக்கிறீர்களே! சரி! கவனிப்போம்!

அவன் ஒரு கள்வன். தன் தலைவன் கட்டளைப்படி ஒரு செல்வந்தர் வீட்டில் திருடச் சென்றான். பதுங்கிப் பதுங்கி உள் நுழைந்தான். பெட்டகம் ஒன்றைத் திறந்து கைவைக்கையில் திரும்பிப் பார்த்தான். படமொன்றில் காட்சியளித்த ஒருவர் அவனைப் பார்ப்பதைக் கண்டான். நடுக்கமேற்பட்டது. இன்னொரு பக்கம் சென்றான். அந்தப்படத்திலுள்ளவரின் கண்களோ, அதன்முன் எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளியில் அவன் செல்லுமிடமெல்லாம் நோக்குவதாகத் தெரிந்தது. பயந்தே போனான். வெளியேறினான். தலைவனிடம் சொன்னான். "நீ கோழை! உன்னை அனுப்பிய நான் மடையன்" என்று முழங்கிவிட்டுத் தானாகச் செல்வந்தர் வீட்டில் நுழைந்தான் கள்வர் தலைவன். சற்றிப் பார்த்தான். கள்வன் கூறிய படத்தை அவதானித்தான். திரு இருதயநாதரின் கண்களோ அவனை உற்றுநோக்கின. திருட முனைந்தான். முடியவில்லை. திரும்பவும் திரும்பவும் படத்தைப் பார்த்துக் கொண்டான். அவன் மனமோ முப்பது முழு வருடங்களைத் தாண்டிச் சென்றது. இவ்விதமான ஒரு திரு இருதயநாதரின் முன் தன் அன்னையும் தந்தையும் தானுமாக முழந்தாட்படியிட்டு செபித்த காட்சி அவன் மனதைக் கலக்கியது. வெளியேறினான். கள்வர் கூட்டத்தை நல்வழிப் படுத்தினான். தானும் மனந்திரும்பினான். நற்தொண்டுகளில் ஈடுபட்டான். ........ அடுத்த சம்பவம் இதோ!

அவள் ஒருதாசி. அடுத்த வனத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த இளந் துறவியின்மேல் அவளுக்கு ஒரு கண். தன் வலையில் அத்துறவியைச் சிக்க வைக்க அவளெடுத்த பிரயாசைகளோ அனந்தம். நாட்கள் பல கழிந்தன. அவளோ சோர்வடையவில்லை.

அன்றொருநாள் அலங்கார சகிதமாய்ச் சென்றாள் துறவியிடம். அவர் முன் மண்டியிட்டுத் தனது பாவ இச்சைகட்கு அவர் சம்மதிக்க வேண்டுமென்று இரந்தாள். துறவியும் இசைந்தவராகத் தோன்றினார். "சரி, வா இக்குகையினுள்ளே செல்வோம் இங்கே யாராவது பார்த்துவிடுவார்கள்" என்றார். தாசிக்கோ சொல்ல முடியாத ஆனந்தம். "கரைப்பார் கரைத்தால் கல்லும் கரைந்துவிடுமே' என்று எண்ணினாள். குகையினுள் சென்றதும் இருவரும் தரித்தனர். "இங்கே எவருமில்லையே" என்றாள் தாசி. "இல்லை அங்கே பார். அந்த வாயிலினூடாக நாம் நிற்கும் இடம் வெளியே தெரிகிறதே. இன்னும் உள்ளே செல்வோம்" என்றார். இவ்விதமாக அவர்கள் குகையின் அடித்தளத்தை அடைந்து விட்டனர். "சரி இதுதான் சிறந்த மறைவான இடம் இல்லையா" என்றார் துறவி. "ஆமாம்" என்று ஆவலுடன் கூறினாள் அவள். ஆனால்......... எம்மை ஏதோ ஒரு இடத்திலிருந்து யாரோ பார்க்கிறார்கள் என்று நீ நினைக்கவில்லையா என்று அடுத்து ஒரு கேள்வி போட்டார் துறவி. ஐந்து நிமிடங்கள் நிசப்தம்... தாசி மண்டியிட்டாள் துறவியின் காலடியில். கண்ணீர் நனைத்தன அவர் பாதங்களை. "இறைவனுக்காக என்னை மன்னித்துவிடுங்கள். தேவன் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எந்த இருண்ட குகையிலும் அவரது பார்வைக்கு நாம் தப்பிவிட முடியாது. என்னை நல்வழிப்படுத்துங்கள்" என்று வேண்டினாள் அவள். துறவியின் மகிழ்ச்சியைச்சொல்லவும்வேண்டுமா?

ஆம்! தேவன் எம்மைக் காண்கிறார்! அவரது பார்வை சக்தி வாய்ந்தது! அப்பார்வைக்குப் பயந்து நேர்வழியில் நடந்து செல்ல முயலுவோமாக!

—செல்வி, ரோஸ் பிளசம் சாமுவேல்.

## இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்திய மதம்

பம்பாய் 28 நவம்பர்

எந்த மதத்துக்கும் பாரதநாடு தனிச்சலுகையோ அல்லது கெடுதியோ விளைவிக்க மாட்டாது. எம்மதமும் சம்மதம் என்பது எங்கள் கொள்கையாகும் என சர்வதேச சற்பிரசாத மாநாட்டின் ஆரம்ப விழாவில் இந்திய உபஜனாதிபதி டாக்டர் பேராசிரியர் சாகீர் உசைன் பேசுகையில் குறிப்பிட்டார்.

உபஜனாதிபதியவர்கள் பாரத அரசாங்கத்தின் பிரதிநிதியாக மாநாட்டில் கலந்துகொண்டார்.

மதசார்பற்ற நாடாக இருப்பதில் இந்தியா பெருமைகொள்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னதாகப் பரிசுத்த தோமையார் இந்தியாவுக்குக் கத்தோலிக்க மதத்தைக் கொண்டு வந்தார். அன்றிலிருந்து இந்தியாவில் இம்மதம் மற்றைய மதங்களுடன் எல்லா உரிமைகளையும் கொண்டிருக்கிறது என உபஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

(விசேட தந்திச் செய்தி)

கிறிஸ்மஸ் பண்டிகையை



சிறப்பாக கொண்டாட வேண்டு மானல் ஏன் கவலைப்படுகிறீர்கள்!

அழகான கிறிஸ்மஸ் மரங்கள் (X'mas Trees) வேண்டிய அளவில் அனுப்பமுடியும், வீட்டிற்கும், குடில் ஜோடிக்கவும், நல்லபூக்களும் (FLOWERS) குறிப்பிட்ட நேரத்தில் அனுப்பிவைக்கலாம். விபரங்களுக்கு எழுதவும்.

எஸ். ஏ. பெர்னாந்து,
தபால்பெட்டி 16. போன்: 283,
நுவரேலியா.

## சாதாரண வீடுகளிலும் பூசைவைக்க அனுமதி

ஆயிரக்கணக்கான குருமார் சர்வதேச சற்பிரசாத மாநாட்டிற்குப் போயிருக்கிறார்கள்.

அதிவந்தனைக்குரிய கருதினல் கிருசியாஸ் ஆண்டகை பம்பாய் வந்துள்ள குருமாருக்குப் பூசைவைக்க இடவசதியில்லாததால் குருமார் தங்கியிருக்கும் வீடுகளிலும் பூசை வைக்க உத்தரவளித்திருக்கிறார்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் ருதி நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org